5th March 1959]

Eviction of agriculturists

* 98 *Q.*—Sri V. V. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any petition has been received from the agriculturists of Amboorani, Sattankulam, Nanguneri taluk, Tirunelveli district, about any unauthorized use of water for irrigation and arbitrary eviction of agriculturists from lands; and

(*b*) if so, the action taken or proposed to be taken by the Government in this regard?

The Hon. Sri M. A. MANICKAVELU: (*a*) Yes, Sir.

(*b*) The Government examined the contents in the petition in consultation with the Collector of Tirunelveli and the Board of Revenue and found that there had been no irregularity in the use or distribution of Manimuthar water nor any case of arbitrary eviction of agriculturists from the lands, as alleged.

Sri S. P. SIVASUBRAMANYA NADAR: பொய்யான தகவல் கொடுத்தவரின் பேரில் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: பொய்யான தகவல் கொடுத்தவரின் பேரில் யார் நடவடிக்கை எடுத்துக்கொள்வது?

Sri K. T. KOSALRAM: இது முற்றிலும் பொய்யான தகவல் என்பது தெரியவருகிறதா?

The Hon. Sri M. A. MANICKAVELU: முற்றிலும் பொய்யானது என்று தான் தெரியவருகிறது.

Sri K. T. KOSALRAM: முற்றிலும் பொய்யானது என்று அரசாங்கத்திற்குத் தெரியும்போது, இந்தத் தகவலைக் கொடுத்தவர்களின் பேரில் ஏன் தீவிர நடவடிக்கை எடுத்துக்கொள்ளக் கூடாது?

The Hon. Sri M. A. MANICKAVELU: நடவடிக்கை எடுப்பது என்றால், கோர்ட்டு மூலம் எடுக்க வேண்டும். கோர்ட்டுக்குப் போவதென்றால், சில தகவல்கள் வேண்டியிருக்கும். இது சிக்கலானது.

Sri K. T. KOSALRAM: கோர்ட்டுக்குப் போவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்காவது அரசாங்கம் அனுமதி கொடுக்குமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: அதிகாரிக்கு அனுமதி கொடுக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. பாதிக்கப்பட்டவர் கவனிக்க வேண்டியது.

Children in Government hospitals

* 99 *Q.*—Sri V. V. RAMASWAMI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any instances have come to the notice of the Government in which children in Government hospitals in the mufassal have been lost; and

(*b*) if so, the steps proposed to be taken to prevent such occurrences?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Suitable instructions have been issued in the matter to the Heads of all Government Medical Institutions in the State.

SRI V. V. RAMASWAMI : அருப்புக்கோட்டை சர்க்கார் மருத்துவ நிலையத்தில் காவல் இருக்கும் போலீசாரின் மனைவியே அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விட்டதாகவும், அப்புறம் அந்தக் குழந்தை மீட்டுக் கொடுக்கப்பட்டதாகவும் பத்திரிகையில் செய்தி வந்தது. அது விஷயம் அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அரசாங்கத்திற்குத் தெரிந்திருக்கும் தகவல் இதுதான். 1945-ம் வருஷம் திருவண்ணமலை சர்க்கார் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தை காணமல் போய்விட்டது. 1958-ல் மாயவரம் சர்க்கார் ஆஸ்பத்திரியில். மூன்றுவது அருப்புக்கோட்டை ஆஸ்பத்திரியில். இந்தக் குழந்தை கிடைத்துவிட்டது.

SRI K. T. KOSALRAM : கிடைத்த குழந்தை யாருடையது என்று தீர்மானிக்க முடியாமல் வழக்கு கோர்ட்டில் இருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதைப்பற்றி இப்போது என்னிடம் தகவல் இல்லை.

3-10 p.m. SRI MOHAMED RAZA KHAN : Sir, is it due to the negligence of the staff that the children were lost or due to other factors?

THE HON. SRI M. A. MANICKAVELU : We cannot say that this was due to the negligence of the staff. The proposal now is to have trellis-work so that better control could be had. The Medical Officers and others working in the hospitals have also been enjoined to have an eye on these children more often and whenever possible.

SRI A. GAJAPATHY NAYAGAR : மருத்துவச் சாலையிலிருந்து வெளியே போகும்போது, பெற்றவர்கள் தாங்களாகவே தங்கள் குழந்தைகளை மருத்துவச் சாலையிலேயே விட்டுவிட்டுப் போய்விடுகிறார்கள் என்பது உண்மைதானா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அவர்கள் தாங்களாகவே தங்கள் குழந்தைகளைக் கொடுத்துவிட்டால், யாருக்கும் அதைப்பற்றி ஆட்சேபணையில்லை.

Anicut across Adyar River

* 100 *Q.*—SRI T. PURUSHOTHAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to construct an anicut across Adyar River for feeding the Thiruvanmiyur tank in Saidapet taluk ;

(*b*) if so, the probable cost of the scheme and the areas to be benefited thereby ; and

(*c*) the stage at which the matter stands?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Minister for Public Works) : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.